ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூதஹு கார்த்திகைமீ பகுதி கக.

Vol 7. November & December 1930. No. 11.

நாரதர் உபதேசம்.

துரியோதனாதியர்களுடைய யாகத்திற்காக வந்த ராஜாக்களிடம் ஸ்ரீமத் த்வாரகையின் அரணையும் சிறப்பையும் அங்கெழுந்தருளியிருக்கிற கிருஷ்ணனுடைய பெருமையையும் துரியோதனாதிகள் சொல்லக்கேட்டு அவர்கள் கிருஷ்ணனோடு நட்புக்கொள்ள விரும்பி பாண்டவதுரியோதனாதிகளுடன் புறப்பட்டு ரைவதகம் என்கிற பர்வதத்தைக்கிட்டித் தங்கள் வருகையைக் கண்ணபிரானுக்குத் தெரிவிக்குமாறு ஆளனுப்ப, கண்ணபிரானும் 'இவர்கள் வருகைக்குக் காரணம் யாது?' என்று ஆராய்ந்து § நம்பிமூத்தபிரான் * ஸாத்விகியாழ்வார் முன்னாக ஆயுதங்களுடனும் பரிவாரங்களுடனும் அந்த ரைவதகம் என்கிற மலையிடம் எழுந்தருளினார். அதன்பிறகு ஆங்குவந்திருப்பவர்கள் க்ஷேமங்களை விசாரித்து அவர்களுடைய வயதுகளுக்கும் மதிப்புக்கும் தக்கவாறு ஆஸநமிட வேண்டுவார்க்கெல்லாம ஆஸநமிடுவித்து தாமும் ஒரு திவ்ய ஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளியிருந்தார்.

§ நம்பிமூத்தபிரான்—பலராமர்.

* ஸாத்விகியாழ்வார்—கண்ணபிரானுக்குத் திருத்தம்பிமார் முறையில் ஒருவர்

அப்பொழுது நாரதபகவான்வந்து கண்ணபிரானை ஸேவித்து தேவரீரே புருஷோத்தமராயும் ஆச்சர்யராயும் தந்யராயுமிருக்கின்றீரென்று விண்ணப்பம் செய்தார். இதைக்கேட்ட கண்ணபிரான் புன்முறுவல்செய்து தக்ஷிணைகளோடே கூடிய நான் ஆச்சர்யனாகவும் தந்யனாகவும் சொல்லப்பட்டவன் என்றருளிச்செய்தார். இதனைச் செவியுற்ற நாரதர் சந்தோஷங்கொண்டு 'இங்குக் குழுமியிருக்கிற ராஜாக்களின் மத்தியில தேவரீர் அருளிச்செய்த வாக்கியத்தினால் திருப்தியுடையவனாகிறேன்; இனிச்சென்று வருகிறேன்; என்றுரைத்தனர். இந்தச்சந்தர்ப்பத்தில் அங்கிருந்த அரசரனைவருக்கும் கண்ணபிரானும் நாரதரும் உரையாடிக்கொண்ட ரஹஸ்யங்கள் புலப்படாமையால் அவர்கள் கண்ணபிரானைநோக்கி, மஹருஷி "ஆசசர்யராகநின்றீர்; தந்யராகநின்றீர்' என்று தேவரீரைக்குறித்துரைத்ததும், அதற்குத் தேவரீர் 'தக்ஷிணைகளோடு கூடிய யான் அங்ஙனமாகாநின்றேன்' என்று உத்தரமருளிச்செய்ததும் எங்கட்கொன்றும புலபபடவில்லை. இவற்றைத் தெளிவாக அருளிச்செயய வேண்டும் என்று வேண்டினர். அப்பொழுது அவர்களைக் கண்ணபிரான்நோக்கி 'இவற்றை மஹருஷியினிடத்திற் கேளுங்கள்; அவர் உங்கட்குச் சொலலக்கடவர்' என்று அருளிசசெய்து அவரைக் குறித்து 'நீர் இவர்கட்குச் சொல்வீர்' என்று அருளினர்.

அப்பொழுது நாரதபகவான் அவர்களைநோக்கி உரைக்கத் தொடங்கினர். நான் ஒருசமயம் கங்கைககரையை அனுகி ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு வர்த்திக்கின்றவேளையில் இராக்காலம் கழிந்து சூரியனுதித்தபோது கூப்பிடுவழியகலமும் அதிலிரட்டிப் நீளமுமாய் நீருக்குள்ளே நனைந்து உடம்பெங்கும் பாசிபறறிக்கண்ணுக்குப் பிரியமாயிருபபதொரு கூர்மத்தை (ஆமையை)க் கண்டு கூர்மமே! நீ இரண்டு கபாலங்களோடு விளங்கி இந்த ஜலத்திறகுள் ஒன்றையும் சிந்தியாமல் ஆசையற்றுச் சஞ்சரிக்கின்றாய்; இபபடியிருக்கிற ஆச்சர்யமான சரீரத்தை யுடையனாகாநின்றாய்; தன்யனாகாநின்றாய் என்று சொன்னேன்.

இதனைக்கேட்ட அந்தக் கூர்மம் என்னைப் பார்த்து ஒரு மனுஷ்யன் பேசுவது போல மஹருஷியே! என்பக்கல் ஆச்சரி

மேதூ! நான் எங்ஙனம் தங்யனுகாநின்றேன்; என்னைப் போன்ற ஜலத்தில் வசிக்கின்ற ஜந்துக்கள எண்ணிறந்தன சண்டுள்ளன; அவற்றுக்கெல்லாம் இடங்கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த நதியன்றோ ஆச்சர்யையும், தங்யையுமாகும் என்றுரைத்தது.

அதன்மேல் யான் அந்த நதியைக்குறித்து நீ ஆச்சர்யை யாகாநின்றாய் தங்யையாகாநின்றாய் என்றுரைத்தேன். அந்தக் கங்கையானது ஒரு வடிவுகொண்டு நின்று 'நான் ஆச்சர்யையும் தங்யையுமல்லேன்' என்னைப் போன்றுள்ள அநேக நதிகளெல்லாம் சென்று புகுதற்கு இடந்தருகின்ற சமுத்திரமன்றோ ஆச்சர்யமும் தங்யமுமாகும் என்று சொல்லியது.

பின்னர் யான் அந்தச் சமுத்திரத்தைப் பார்த்து, லோகத்தில் நீயே ஆச்சர்யமாகா நின்றாய்; தங்யமாகா நின்றாய் என்று சொன்னேன். அந்தச் சமுத்திரம் என்னைப்பார்த்து நீ சொன்ன ஆச்சர்யமும் தங்யதையும் எனக்கில்லை; நான் வசிப்பதற்கு இடந்தருகின்ற பூமிக்கன்றோ இவையிரண்டும் இயல்பாயுள்ளனவாகும் என்றது.

பிறகு யான் பூமியை ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு 'நீ ஆச்சர்யையாகாநின்றாய்; தங்யையாகாநின்றாய்' என்றுரைத்தேன். இந்தப புகழ்ந்துரையைக் கேட்ட பூமியானது நாணமுற்று என்னைக்குறித்து நீர் இங்ஙனமுரைத்த இரண்டு பெருமைகளும் எனக்கில்லை; எனக்காதாரமாயிருக்கிற குலபர்வதங்கட்கன்றோ அவையிரண்டு முள்ளனவாகும் என்றது.

அநந்தரம் யான் அந்தப் பர்வதங்களைக்கிட்டி உலகத்தில் நீங்களே தங்யங்களும் ஆச்சர்யங்களுமா யிருக்கின்றீர்கள், என்றேன். அப்பர்வதங்கள், என்னைப்பார்த்து 'நாங்கள் தங்யங்களையும் ஆச்சர்யங்களையு முடையோமில்லை; எல்லாவற்றையும் சிருஷ்டிக்கின்ற பிர்ம்மாவே இவ்விரண்டையுமுடையவராவார் என்று உரைத்தன.

அதன்மேல் பிர்ம்மாவைச்சென்று கிட்டி அநுவர்த்திக்கும் கிரமத்தில் அநுவர்த்தித்து அவருடைய பெருமையெல்லா மெடுத்துரைத்து ஆச்சர்யரும், தங்யருமாகாநின்றீர்; உம்மை யொப்பார்

லோகத்தில் ஒருவருமில்லை; என்றேன். பிர்மா என்னை நோக்கி நீ இப்படி என்னைத் துதிக்கவேண்டா; ருக் யஜுஸ் ஸாம அதர்வண வடிவங்களாய் உண்மையை வெளியிடுவனவாயுள்ள வேதங்களே லோகங்களையும் என்னையும் தரியாநின்றன; அவற்றிற்கன்றோ இவை யிரண்டும் உரியனவாகும் என்றனர்.

அதன்பிறகு யான் அவ்வேதங்களைக்கிட்டி அவற்றின் வைபவத்தைச்சொல்லி ஸ்துதித்துக்கொண்டு 'நீங்களன்றோ தந்யரும் ஆச்சர்யபூதருமாய் விளங்குகின்றீர்கள்' என்றேன். அந்தவேதங்கள் என்னைபபார்த்து 'நாங்கள் யக்ஞத்தின் பொருட்டாக ஏற்பட்டிருக்கிறபடியால் அவைகட்கே தந்யதையும் ஆச்சர்யமுமுள்ளன என்றுரைத்தன.

பின்னர் யான் யஜ்ஞங்களைப்பார்த்து ஸ்தோத்திரஞ்செய்து கொண்டு 'உங்களைக்காட்டிலும் தந்யங்களுமில்லை; ஆச்சர்யங்களுமில்லை; என்றேன். அந்த யஜ்ஞங்கள் என்னைப்பார்த்து இவை எங்களிடததிலில்லை; எங்களிடத்தில் ஹோமஞ்செய்த ஆஹுதியின் பலனைக்கொடுப்பவன் விஷ்ணு ஸ்வரூபியாகிய பரதேவதையே; அந்தப பரமாத்மாவினிடத்திலே நீர் கூறிய குணங்கள் நிறைந்து கிடக்கின்றன என்றுரைத்தன.

இதைக்கேட்ட யான் பூமியில் வந்து உங்கள் திரளுக்கு நடுவே யிருக்கிற கிருஷ்ணனைக்கண்டு ஸேவித்து நீரே ஆச்சர்யருமாகா நின்றீர்; தந்யருமாகா நின்றீர்; என்று விண்ணப்பம் செய்தேன். அதற்குக் கண்ணபிரான் 'தக்ஷிணையோடேகூடியே நான் தந்யனுகவும் ஆச்சர்யனுகவும் சொல்லப்படுகிறேன்' என்று சொல்லி என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்தருளினர். அதனுல் 'திருப்தனனே னென்று உபதேசித்தார்.

இவ்வாலாறு ஹரிவம்சம் நூற்றைம்பத்தொன்பதாம் அத்யாயத்திற் சொல்லப்பட்டுளது. இதனைப் பெரியாழ்வார்,

* "ஆமையாய்க்கங்கையாயாழ்கடலாயவனியாயருவரையாய்
நான்முகனாய்நான்மறையாய்வேள்வியாய்த்தக்கணையாத்தானுமானான்
சேமமுடைநாரதனார்சென்றுசென்றுதுதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில்
பூமருவப்புள்ளினங்கள்புள்ளரையன்புகழ்குழறும்புனலரங்கமே."

என்றருளிச்செய்தார்.

---

* (இதன் பொருள்) சேமம் உடை-பரப்பிரம்மத்தை சிந்தனைச்செய்து கொண்டிருத்தலாகிய பிரம்மபாவனையுடைய, நாரதனார்-நாரத மஹரிஷி; சென்று சென்று-(ஆமை முதலான வடிவங்கள் தோறும்) சென்று கிட்டி. துதித்து-ஸ்தோத்திரம்செய்து, இறைஞ்ச-வணங்குமாறு (அந்த நாரதருக்குத் தன் மேன்மையைத்தெரிவிப்பதற்கு)ஆமையாய்-(முன்னர் கங்காஜலத்திற் குள்ளே பெரியவடிவினதாயும் பிரியப்படத்தக்கதாயும் ஆச்சர்யமாயுமிருப் பதொரு) ஆமையாயும்; கங்கையாய்-(ஆமை போன்ற அநேகமாயிரம் நீர்வா ழுயிர்கள் வாழ்வதற்கிடமாயிருக்கிற) கங்காநதியாயும், ஆழ்கடலாய்-(கங் கைக்கும் மற்ற நதிகட்கும் புகலிடமாயிருக்கின்ற) ஆழமாயிருக்கும் பெருமை யையுடைய சமுத்திரமாகியும், அவனியாய்- (அந்தச் சமுத்திரந்தனக்கும் தனக்குள்ளே வாஸஸ்தானமாயிருக்கும் பெருமையையுடைய) பூமியாயும், அருவரைகள் ஆய் -(அந்தப்பூமிக்கும் ஆதாரங்களாயிருக்கும் பெருமையை யுடைய) அரியமலைகளாயும், நான்முகன்ஆய்-(இவைகளையெல்லாம் சிருஷ் டிக்கும் பெருமையையுடைய) பிரம்மதேவனாகியும், நால் மறை ஆய்-(அந்த நான்முகனும் அப்பதவியில் நிற்க உதவுகின்ற) நான்கு வேதங்களாகியும், வேள்வி ஆய்-(அந்த வேதங்களாற் செய்யப்படும்) யாகமாயும், தக்கணையாய்- (அந்தயாகத்திற் கின்றியமையாதிருக்கின்ற) தக்ஷிணையாகியும், தானும் ஆனான் [அந்த தக்ஷிணையின் மூலமாக எல்லோர்க்கும் தத்தம் அபேக்ஷித குத்தகுதியாகப் பலத்தைக்கொடுக்கும் பெருமையோடு தனக்கேயுரிய திரு மேனியையுடைய] தானாகியும் நின்றானாய், கிடந்தான்-(அந்த நாரதபகவான் எப்போதும்வணங்கப்] பள்ளிகொண்டிருப்பவனது, கோயில்-கோயிலானது, புள் இனங்கள்-பறவைக்கூட்டங்கள், பூமருவி புஷ்பங்களிற் பொருந்தி, புள் அரையன்-பக்ஷிராஜனாகிய கருடாழ்வானுடைய புகழ்-கீர்த்தியை. குழறும்- சொல்லுதற்கிடமான, புனல் அரங்கமே-நீர் சூழல்பெற்ற ஸ்ரீரங்கம்; என்றவாறு.

ஸ்ரீ:

பாகவதாபசாரம்.

(275-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, மூன்றுவது தோஷத்தின் பரிகார முரைக்கப்படும் மூன்றுவது தோஷம் பிராம்மண்யத்துக்குமேல் தேவஜாதி யிருப்பதால் இந்தப் பிராம்மண்யமே உயர்ந்த ஜாதியென்று கூறுவது பொருந் தாதென்றுரைக்கப் பட்டது. அதுவும் ஸம்பவியாது. ஏனெனில்; தேவ மனுஷ்ய திரியக்ஸ்தாவரம் என்னும் நால் வகைச் சாதிகளில் உயர்விற்கு எல்லையாகத் தேவஜாதியைக் கூறின் தாழ்விற் கெல்லையாக ஸ்தாவரத்தன்மை ஜாதியைக் கூறுவதாகும். "ஜைச்சியம் ஜன்மஸித்தம்" என்று நூலாசிரியர் தண்ணிய வர்ணத்தை விரும்பியது பகவல்லாபஹேதுவான பகவதநந்யார்ஹசேஷத்வ ஜ்ஞாநத்திற்கு உபயோகியென்று. ஸ்தாவர ஜங்மங்கள அந்தச் சேஷத்வஜ்ஞானத்திற்கு அயோக்கியங்களாகையால் அவற்றிலுள்ள தாழ்மை நூலாசிரியரின் விருப்பத்திற்கு விஷயமன்று. ஜன்மாதிகளின் உதகர்ஷம் முற்கூறிய சேஷத்வஜ்ஞாநத்திற்கு விரோதியென்று நூலாசிரியரால் அநாதரிக்கப்பட்டது.

தேவர்களும் இபபூலோகத்தில் வந்து பிறந்து மோக்ஷ ஸாதனத்தைப்பெறவேண்டுமென் றிருப்பதால், தேவரிடத்திலுள்ள உயர்வு முற்கூறிய மோக்ஷ ஸாதனமான சேஷத்வஜ்ஞானத்திற்கு விரோதியன்று. ஆகையால் இவவிடத்தில் நூலாசிரியர் அருளிச்செய்த உயர்ந்ததும தாழ்ந்ததுமாகிய ஜாதிகள் மோக்ஷோபயோகியான மநுஷ்யத்வஜாதியின் வியாப்யமான ப்ராஹ்மணத்வ சூத்ரத்வஜாதிகளென்று கொள்ளத்தக்கது. தேவத்வஜாதி மனுஷ்யத்வ ஜாதியின் வியாபயமாகாமையாலும்; மனுஷ்யத்வஜாதிகளின் வியாப்ய ஜாதிகளில் பிராஹ்மண்யமே உயர்ந்த ஜாதியாகையாலும் அது, அஹங்கார ஹேதுவாய் இழவுக்குறுப்பாகில என்று அருளிசெய்தார். இதனல் பராஹ்மண்யததுக்குமேல் தேவஜாதி யிருப்பதால இதுவே உயர்ந்ததென்று கூறுவது பொருந்தாது என்று அவர்கள் கூறுவது அபிமானகார்யமென்று ஏற்படுகிறது.

இனி, நான்காவது தோஷத்தின் பரிகார முரைக்கப்படும். நான்காவதி தோஷம சூத்ர ஜாதியும் பஞ்சமஜாதியை நோக்க, உயர்ந்த தாதலால சூத்ரர்களுக்கும் 'நான் ஜாதியால் உயர்ந்தவன்' என்னும் ஜாதிகாரணமான அஹங்காரம் உண்டாகலாமென்று கூறப்பட்டது. அங்ஙனம் கூறுவதும் பொருந்தாது. ஏனென்றால சூத்ரர்கட்குப் பஞ்சமஜாதியை நோக்க உண்டாகுமுயர்வு ஸாபேக்ஷம். அது தன்னிலுமுயர்நத வைசியத்வமுதலிய ஜாதியை நோக்கத் தலைசாயும். அஃதாவது- "நான் பஞ்சம ஜாதியைக் காட்டிலுமுயர்ந்தவன்" என்னும் அஹங்கார முண்டானால் நான் வைசியத்வ முதலியஜாதிகளைக் காட்டிலும் தாழ்ந்தவன் என்னும் ஜ்ஞாநமுண்டாக உடனே அந்த அஹங்காரம் ஒழியும். பிராம்மண்யத்திலுள்ள அஹங்காரம் நிரபேக்ஷமாய் "நான் ஜந்மாதிகளால் உயர்ந்தவனென்று தோற்றுவதால், அது எவ்வித காரணங்களாலும் ஒழியாமல் கேவலம் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞானத்தின் முதிர்ச்சி ஒனறினாலே ஒழிகின்றது. அங்ஙனம் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநம் நிலை பெறுதவிடத்து அதனையடக்கித் தான் மேலெழுந்து பகவத் விஷயத்தை இழக்கச செய்கையால "அது இழவுக் குறுப்பாகில்" என்று அருளிச்செய்தார். இதனால் நான்காவது தோஷமும் இல்லையென்ப துரைக்கபபட்டது.

இனி, ஐந்தாவது தோஷத்தின் பரிகாரம் உரைக்கப்படும். ஐந்தாவது தோஷம் உயர்ந்த ஜாதிகளிலும் தாழ்ந்த ஜாதிகளிலும் ஆழ்வார்கள் அவதரித்திருபபதால் அவர்களில உயர்ந்த ஜாதியுடையவர்களைத தோஷம் சொன்னதாக ஏற்படுமென் றுரைக்கப்பட்டது. இத்தோஷமும் ஸம்பவியாது. ஏனெனின்; நூலாசிரியர் அது அஹங்காரத்திற்குக் காரணமாம்போது தியாஜ்யம் என்றருளிச் செய்தாரே ஒழிய ஜாதிமாத்திரத்தைச் சுட்டித் த்யாஜ்யம் என்றருளிச் செய்யவில்லை. ஆழ்வார்கள் சிலரிடத்தில் பிராம்மண்ய மிருப்பினும அஃதவர்கள் விருப்பத்திற்கு விஷயமாகாமல் வெறுபபு விஷயமாய் நீக்கமுடியாமற கிடந்ததென்று முன்னுரைக்கபபட்டது. அதனை, ஈண்டு மறிக.

ஆதலால் உத்க்ருஷ்ட ஜன்மத்திலவதரித்த ஆழ்வார்களிடத்தில் தோஷம சொன்னதாக ஏற்படுமென்பது முற்றும் பொருந்தாது. மேலும், ஆழ்வார்களிடத்தில இரண்டுவிதமான ஏற்றமுண்டு. அவையாவன பகவத் சேஷத்வமடியாகவந்த ஏற்றமொன்று; பாகவத சேஷத்வமடியாகவந்த ஏற்றம் மறறொன்றென்பனவாம். இவற்றுள் உத்க்ருஷ்ட வர்ணத்திலவதரித்த ஆழ்வார்களிடத்தில் பகவத் சேஷத்வத்தின் ப்ரதிபந்தகமின்மையால் அந்தச சேஷத்வமுண்டாவது இயல்பு. * உத்க்ருஷ்ட ஜநமாவாகையால் பாகவத சேஷத்வத்தின் பரதிபந்தகமிருந்தும் ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் முதலியோரிடத்தில் அந்தப பாகவத சேஷத்வம் நிலைபெற்றிருந்தது.

அபக்ருஷ்ட ஜன்மத்தில் அவதரித்த ஆழ்வார்களிடத்தில் * பாகவதசேஷத்வத்தின் ப்ரதிபந்தகமின்மையால் அந்தப பாகவத சேஷத்வ முண்டாவது இயலபு. பகவத் ஜ்ஞாநத்திற்குரிமையல்லாத தாழ்ந்த ஜன்மமாகையால ‡ அதன் பிரதிபந்தகமிருந்தும் அந்தப் பகவத்ஜ்ஞாநம் நிலைபெற்றிருநதது. இதனல் உத்க்ருஷ்ட ஜன்மத்தி லவதரித்தவர்கட்குப பகவத்சேஷத்வமும், பாகவத சேஷத்வமும் இ ர ண் டு ம் ச ம மா க இருப்பினும் பகவத் சேஷத்வமடியாகவந்த ஏற்றத்தைக் காட்டிலும் பாகவத சேஷத்வமடியாக வந்த ஏற்றமே மிகவும் உயர்ந்ததென்றும், அபக்ருஷ்ட ஜன்மத்தில் அவதரித்தவர்கட்குப பகவத்சேஷத்வமும், பாகவத சேஷத்வமும் சமமாக விருபபினும பாகவத சேஷத்வத்தினடியாகவந்த ஏற்றத்தைக்காட்டிலும் பகவத்சேஷத்வத்தினடியாகவந்த ஏற்றமே மிகவும் உயர்ந்ததென்றும் ஏற்படுகின்றன. ஏனெனின் இருவருக்கும் இரண்டும் (பாகவதசேஷத்வமும் பகவத்சேஷத்வமும்) அவற்

---

* அபகிருஷ்ட ஜன்மத்தில அவதரித்தவர்கட்கு நைச்சியம் ஜன்மஸித்தமாதலாலஅவர்கட்குப் பாகவதசேஷத்வமுண்டாவது இயல்பு. அதனல் பாகவதசேஷத்வத்தின் ப்ரதிபந்தகமின்மையால் என்றுரைக்கப்பட்டது.

‡ வேத முதலிய சாஸ்திரஙகளின் அர்த்தங்களைத் தெரிந்து அதனல் பகவத்ஜ்ஞாநத்தைப் பெறுதற்கு யோக்கியதையில்லாத ஜந்மாவாகையால் அந்தப் பகவத்ஜ்ஞாநத்தின் பிரதிபந்தகமிருந்தும் என்று சொல்லப்பட்டது.

றின் தடையுள்ள விடத்தும் தோன்றினவாதலால் அவை மிகவும் உயர்ந்தனவென் றுரைக்கப்பட்டன.

இதுநிற்க; எங்ஙனம் ஆசார்யன் ஈசுவரனையும், ஈசுவரன் ஆசார்யனையும் உபகரித்ததால் இரண்டு பேர்களும் உபகாரத்தால் சமமாகிலும் உபகரிக்கப்பட்ட வஸ்துவின் ஏற்றத்தால் ஆசார்ய னது உபகாரத்தைக் காட்டிலும், ஈசுவரனது உபகாரமே மிகவும் சிறந்ததென்று ஏற்படுகிறதோ, அங்ஙனமே உத்க்ருஷ்டா பக்ருஷ்ட ஜன்மாக்களாகிய இரண்டுபேர்கட்கும் பாகவத சேஷத்வமும் பகவத்சேஷத்வமும் உண்டாகுமருமை சமமாகினும அந்தச்சே ஷத்வ ப்ர திஸம்பந்திகளின் ஏற்றத்தாழ்வால் பகவத்சேஷத்வ முண்டாகும் அருமையைக் காட்டிலும் பாகவத சேஷத்வமுண்டா குமருமையே மிகவும் உயர்ந்தது. பாகவத சேஷத்வம் இரண்டிடத் திலும் சமமாகினும் உத்க்ருஷ்ட வர்ணத்தில அவதரித் தவர்களிடத் திலிருக்கின்ற பாகவத சேஷத்வம் உயர்ந்தவர்களிடத் திலிருக் கின்ற தாழ்மையாதலால் இது, பலரையும் ஈடுபடச் செய்யுமென் பதில் ஐயமில்லை. ஆழ்வார் “ பத்துடையடிவர்க் கெளியவன் ” “பிறந்தவாறும் வளர்ந்தவாறும்” என்னும் திருவாய்மொழிகளில் ஈராறு மாதங்கள் மோஹித்துக் கிடந்ததும் உயர்ந்தவனுடைய எளிமை என்பது கருதியே.

ஆதலால உத்க்ருஷ்ட வர்ணத்தில் அவதரித்த ஆழ்வார் களிடத்தில் பாகவத சேஷத்வத்தின் பிரதிபந்தகமிருந்தும் அந்த பாகவத சேஷத்வம் நிலைபெற்றிருந்ததால் அவர்கட்கு மிகவும் ஏற் றஞ் சொன்னதாக ஏற்படுமே ஒழிய தோஷஞ் சொன்னதாக ஏற் படாது. ஆழ்வார்களைபபற்றி இங்ஙனம் விசாரித்தல் தகுதியன் றாகிலும் அவர்கள் விஷயமாய்க் கேள்வி எழுந்ததால் அதற்கு விடையளித்தல் இன்றியமையாமைபற்றி இங்ஙனங் கூறபபட்டது. இதனால் ஐந்தாவது தோஷமுமில்லையென்று பரிகரிக்கலாயிற்று.

இதுவரை முற்கூறிய அர்த்தங்களே பொருத்த முடையன வென்றும், அங்ஙனம் கூறுவதால் யாதொரு தோஷமும் ஏற்பட வில்லை யென்றும் கூறப்பட்டன. மேலும், இதுவோ அதுவோ

என்னும் சந்தேகத்திற்கு இடமுள்ள விடத்து இவ்வர்த்தமே பொருத்த முடையதென்று அதற்குரிய உபபத்திகள் காட்டுவதுமுறை. அங்ஙனமன்றி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாதொரு சந்தேகத்திற்கு மிடமில்லாமல் வெளிப்படையாய்த் தோற்றுகின்ற முற் கூறிய அர்த்தத்திற்கும் சில அர்த்தங்களை ஏறிட்டுக்கொண்டு சொல்வதால் இங்ஙனம் கூறும்படி நேரிட்டது.

இங்ஙனம் இவர்கள் யதார்த்தார்த்த மின்னதென்று தங்களுடைய திருவுள்ளத்திற் பட்டிருந்தும் அதனை மறைப்பதற்குக் காரணம் அதின்படி தமக்கு அநுஷ்டானம் வாராமையால் குறைவு ஏற்படுமென்று கருதினதாகத் தெரிகின்றது. அந்த அனுஷ்டானம வரவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஏனெனின்; ஸ்ரீ வசன பூஷணத்தின் அர்த்தத்தை உபதேசிப்பதற்கும், அதனைக்கேட்பதற்கும், அதன்படி அநுஷ்டிப்பதற்கும் அதிகாரிதுர்லப மென்பதை அக்காலத்திலே மணவாளமாமுனிகள் ''ஓரொருவருண்டாகில்'' என்று அருளிச் செய்துள்ளார். இதனால் இவ்வர்த்தத்திற் கதிகாரி யாராவது ஒருவர் உண்டானாலு முண்டாகலாம் என்று சம்சய ரூபமாய் அதன் அருமை தோற்ற அருளிச் செய்திருப்பதால இக்காலத்தில அந்தசசம்சயமே வேண்டியதில்லை. இவ்வாத்தத்திற்கு அதிகாரியில்லை என்பதை நிச்சயமாய்க் கூறலாம். இது பற்றியே நம்பூர்வர்கள் இக்கிரந்தத்தை ஸர்வசாதாரணமாக எல்லாருக்கும் உபதேசிக்காமல் பொன்னேபோல் போற்றிவந்தார்கள். இக்காலத்தில் அஃதில்லை.

இவ்வர்த்தத்திற்கு அதிகாரிகள் துர்லபம் என்பதில் உத்க்ருஷ்டாபக்ருஷ்ட வர்ணஸ்தர்களாகிய இருவர்களும் சமந்தான். ஒருவரைக்குறித்து மற்றொருவர் இவ்வர்த்தத்தின் அநுஷ்டானம் உமக்கில்லையென்று குறை கூறுவதற்கும் அதிகாரியில்லை. ஏனெனில்; குறை கூறுகின்றவர்க்கு அந்த அநுஷ்டானமிருந்தாலல்லவோ அஃதில்லாத மற்றவரைக் குறைகூறலாம். ஆகையால் சொல்வதற்கும் கேட்பதற்கும் அநுஷ்டிப்பதற்கும் அஃதில்லையென்று குறை கூறுவதற்கும் அதிகாரி துர்லபமாகிய இவ்வர்த்தத்தின் அநுஷ்டானம் தங்களுக்கு வாராததினால் குறை வேற்படுமென்று கருதி

யதார்த்தார்த்தத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை. ஸ்ரீ வசனபூஷணத்தின் அநுஷ்டானம் வாராமை உத்க்ருஷ்டாபக்ருஷ்ட வர்ணஸ்தர்களாகிய எல்லோர்க்கும் சம மாகையால் அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. அதுகாரணமாக க்ரந்த கர்த்தாவின் திருவுள்ளத்திற்கு விரோதமாக அர்த்தங்களை மாற்றுவது விசனிக்கத்தக்கதே.

இனி, தாழ்ந்த வர்ணஸ்தர்கள் லோகதேசிகன் நமக்குத்தான் ஏற்றத்தை யருளிச்செய் துள்ளார்; அதனால் அக்ரவர்ணஸ்தரைக் காட்டிலும நாம் உயர்ந்தவர்கள் என்று நினைக்கவுங்கூடும். அங்ஙனம் நினைப்பது முற்றிலும் விரோதமாம். ஏனெனில்; லோகதேசிகன் திருவுள்ளம் அங்ஙனமன்று. ஆனால் "பரயோஜகம் பகவத் ஸம்பந்தமும், அஸம்பந்தமும்" என்று அருளிச்செய்த வாக்யத்திலே அவருக்கு முக்ய தாத்பரியம். அஃதாவது பகவத்சேஷத்வத்தின் எல்லையான பாகவதபர்யந்தம் "நாமடிமை" என்னும ஞானமே பேற்றுக்குச்சாதன மென்றும், அந்தஜ்ஞாநத்தினையுடைய ஜந்மம் எதுவானாலும் அதுவே மிகவும் உயர்ந்ததென்றும் அந்தஜ்ஞாநத்தின் இன்மை பகவத் விஷயத்தை இழப்பதற்குக் காரணமாகையால அந்த ஞானமில்லாத ஜந்மம் எதுவானாலும அது மிகவும் தாழ்ந்ததென்றுமுரைதத இவ்வர்த்தமே லோகதேசிகனுக்கு முக்ய தாத்பர்யம். அதற்குபின னெழுந்தவாக்யங்களெல்லாம் எவ்விதத்திலாவது உத்க்ருஷ்ட ஜந்மங்கட்கு ஓர் ஏற்றத்தைச் சொல்லத்தான் வேண்டுமென்னும் ஆக்ரஹமுடையவரை அடக்கும் பொருட்டாகையால் அவற்றில் முக்ய தாத்பர்யமில்லை. எங்ஙனம் ஈசுவரன், சாஸ்திரங்களும் விதியாமல் இவனுமறியாமலிருக்க அஜ்ஞாத ஸுக்ருதங்களைக் கற்பித்துக்கொண்டு சேதனனுஜ்ஜீவனத்தைச செய்வதால அது ஈசுவரனது ரக்ஷணத்திற்குக் காரணமாவதின்றோ அங்ஙனமே தண்ணிய வர்ணத்தைச் சாஸ்திரமும் உயாவென்று விதியாமல் இவர்களுமறியாமலிருக்க லோகதேசிகன் கோலிருக்காடகப் பகவதங்யார்ஹ சேஷத்வத்திற்கு அநுகூலித்திருக்கின்றதென்று திருவுள்ளம்பற்றினாதலால் இது எவ்வாற்றானும் உயர்விற்குக்காரணமாகாது. இல்லாதகாரணங்களை

இருப்பதாக ஏறிட்டுக்கொண்டு அஹங்கரிப் பார்களானால் அவர்கள் ஈசுவரானது அத்யந்த நிக்ரஹத்துக்கு விஷயமாய் அடியோடழிவர்களென்பது சொல்லாமலே பெறப்படும்.

மேலும், பெருமாள் நியமனத்திற்குப்பின்னர் * லோகசாரங்க மாமுனீந்திரும் திருப்பாணாழ்வாரும் நின்ற நிலையே உத்க்ருஷ்ட வர்ணத்தவர்கட்கும் அபக்ருஷ்ட வர்ணத்தினர்க்கும்

---

* பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஸாமகானம் செய்யும் நித்யஸூரிகளில் ஒருவரோ என்று சொல்லததக்க திவ்ய சரித்திரங்களை யுடையரான திருப்பாணாழ்வார். தாழ்ந்த ஜன்மத்தில் அவதரித்தவராகையால் திருவரங்கப் பெருநகரை மிதிக்கலாகாதென்று திருக்காவேரியின் தென்கரைத் திருமுகத்துறைக்கெதிரே வீணையுங் கையுமாய்நின்று திருப்புகழ்கள் பலவும் பாடி பெரிய பெருமாளை அநவரதபாவனை (இடைவிடாத சிந்தனை) செய்து மிகவும் பரவசராய் கண்ணை மூடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது லோகசாரங்கமாமுனிவரர் விடிவோரையில் பெருமாளுக்குத் திருமஞ்சனக் குடமெடுத்துக் கொண்டுபோய் இவரைக்கண்டு "விலகிப்போ" என்று சொல்ல இவ்வுரை பரவசமுற்றிருக்கிற திருப்பாணாழ்வார் செவியில் விழாதிருக்க, முனிவரர் சினங்கொண்டு ஒரு கல்லை யெடுத்து வீசியெறிய, அது இவருடைய முகத்திற்பட உதிரம் பெருக்கிட்டது. அதன்மேல் பாண்பெருமாள் கண்களை விழித்துப்பார்த்துக் கலங்கி "மஹாபாகவதாபசாரப் பட்டோம்" என்று விலகிப்போய் நின்றனர்.

பின்னர் லோகசாரங்கமாமுனிவரர் நீராடி நித்யகர்மாநுஷ்டானங்களைச் செய்து திருமஞ்சன மெடுத்துககொண்டு சத்ர சாமராதிகளோடே வாத்ய கோசத்துடன் பெரிய பெருமாள் ஸந்நிதிக்குச் சென்றனர். பெருமாளும் திருவுள்ளங் கலங்கி "நம்முடைய பக்தனை இவர் இப்படிச்செய்வாரோ?" என்று மிகவும் வருத்தமுற்றிருக்க, அவ்வளவிலே நாய்ச்சியாரும் பெரிய பெருமாளிடத்தில் "நம்முடைய அந்தரங்கரான பாண்பொருமாள் புறம்பே நிற்கலாமோ?" என்று விணணப்பித்தார். பெரிய பொருமாளும் திருக்கதவை மூடிக்கொண்டு முனிவரரை மிகவும்கோபித்து "நம்முடைய பக்தரை நீர் இப்படிச் செய்யலாமோ" என்று கதவைத் திறக்காமலிருந்தனர். அப்பொழுது முனிவரர் அளவற்ற வருத்தமுடையவராய் "அடியேன் மஹாபாகவதாபசாரப்பட்டேன்; அடியேனுக்கு இனி ஈடேறும் வழியாது?" என்று கேட்டனர். பெருமாள் பாண்பெருமாளிடத் திலுள்ள கிருபாதிசயத்தால்

ஸ்வரூபமாம். அஃதாவது பெருமாள் நியமனத்திற்குப்பின் லோக சாரங்கமாமுனிகள் திருப்பாணாழ்வாரைத் தண்டன் ஸமர்பபித்துப் பெரிய பெருமாள் தேவரீரை அடியேனது தோளில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டுவரும்படி நியமித்தார் என்று சொல்ல அவர் அடியேன் நீசன்; திருவரங்கப் பெருநகரை மிதிக்கமாட்டேன் என்று பின்னிட்டார். இதனால் உத்க்ருஷ்ட வர்ணஸ்தர்கள் அபகிருஷ்ட வர்ணத்திற் பிறந்த பாகவதர்

முனிவரரைநோக்கி,"நமக்கு அந்தரங்கரான பாண்பெருமாளை நீர் தாழ்ந்தவராகக் கருதாமல் அவரை உம்முடைய தோளிலே கொண்டு நம்பக்கலில் அழைத்துக் கொண்டுவாரும்" என்று ஸ்வப்பனத்தில் நியமித்தருளினர். அவரும் ப்ராதக் காலத்தில் எழுந்து தாம்கண்ட ஸ்வப்பனத்தைவியந்து, "இன்றை விடிவு நல்விடிவாயிற்று" என்று மகிழ்ந்து, திருமுகத்துறை சென்று நாட்காலே நீராடி அநுஷ்டானஞ் செய்தருளி, அதிதூரத்தில் வீணையைக் கையிலேந்தி ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கிற திருப்பாணாழ்வாரைக்கணடு அவரைத் தாளுநதடக்கையுங கூப்பித தணடன் சமர்ப்பித்து, " நம் பெருமாள் தேவரீரை எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு வரவேணும் " என்று அடியேனை நியமித்தருளினார் என்று விண்ணப்பஞ் செய்தனர். பாண்பெருமாளும் "குலந்தாங்கு சாதிகள் நாலிலுங்கீழிழிந்த" நீசனாகிய அடியேன் திருவரஙகப் பெருநகரை மிதிப்பேனோவென்று அகன்றார். முனிவரர் அப்படியானால் அடியேனுடைய தோளின்மீது எழுந்தருள வேணடும்; பெருமாளும் இப்படியே அருளப்பாடிட்டனா' என்றார்.

பாண்பெருமாளும், "செய்த்தலை யெழுநாற்றுப்போல அவன்செய்வன செய்துகொள்க என்று அத்யந்தபாதந்த்ரராய் வாளாவிருந்தனர். முனிவரர் முக்தனாய்ப் போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருள்வித்துக்கொணடு பரமபதத்திற்குச செல்வதுபோல திருப்பாணாழ்வாரைத் தம் திருத்தோளின் மேல் எழுந்தருள்வித்துக் கொண்டு,அழகியமணவாளன் திருமண்டபத்திற்கு மேற்செல்ல; பெரிய பெருமாளும் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை, ஜந்மதரித்திரனுக்கு நிதிகாட்டுவாரைப்போல இவருககுக் காட்டிக் கொடுத்தனர். பாண்பெருமாளும், பெரிய பெருமாளுடைய திவ்யமங்கள விக்ரஹததைப் பாதாதி கேசாந்தமாக " அமலனாதிபிரான் " என்ற பதிகத்தால் அநுபவித்து, யாவருங்காணும்படி அணியரஙகன் திருவடிகளில் அந்தர்ப்பவித்தருளினார்.

இஙகு லோக சாரஙகமுனிவரது பூர்வநிலை ஜன்மக்கொத்தையின் பாற்படும். பின்னுள்ள நிலை ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞானத்தின் பாற்படும்.

களைக் கண்டால் அவர்கள் ஜன்ம மாத்திரத்தைக் கொண்டு அவ மதிக்காமல் பகவத் சம்பந்தத்தைக் கொண்டு கௌரவப் படுத்து வது உத்க்ருஷ்ட வர்ணஸ்தர்களுக்கு ஸ்வரூபமென்பதும், அபக் ருஷ்ட வர்ணஸ்தர்கள் உத்க்ருஷ்ட வர்ணஸ்தர்களைக் கண்டால் 'அடியேன் நீசன்' என்று நைச்சியபாவனையோடு பின்வாங்குவது அபகிருஷ்ட வர்ணஸ்தர்களுக்கு ஸ்வரூபமென்பதும் ஏற்படுகின் றன. இங்ஙனமன்றி இருவரும் மாறுபாடில் இருவருக்கும் ஸ்வ ரூப நாசமாம். அஃதாவது உத்க்ருஷ்ட வர்ணஸ்தர்கள் அபக் ருஷ்ட வர்ணஸ்தர்களைக் கண்டால் இவன் ஜன்மாதிகளால் இழிந் தவன் என்று பின்வாங்குவதும் அபக்ருஷ்ட வர்ணஸ்தர்கள் உத்க்ருஷ்ட வர்ணஸ்தர்களைக் கண்டால் ''நாம் பகவத் ஸம்பந் தத்தால் உயர்ந்தவர்கள்'' என்று நெருங்குவதும் இருவருக்கும் ஸ்வரூப நாசமென்பதாம். ஏனெனில்; இருவருக்கும் இரண்டும் அஹங்காரத்தின் காரியமாவதால் அவை ஸ்வரூபநாசம் என்று கொள்ளத்தக்கது.

மிற்க; ''நான் திருமாலை சேர்த்தல் முதலிய உயர்ந்த கைங்கர் யத்தைச் செய்கிறே னென்று'' பிறரை அவமதித்து நடப்பதும், ''நான்க்ரந்த காலக்ஷேபம் முதலியன செய்யும் திறமைவாய்ந்து ளேன்''என்று மற்றவர்களை அவமதித்து நடப்பதும் ''நான் ஸம்ப் ரதாயார்த்தங்களை முறையாகக் கேட்டுளேன்''என்று மற்றவர்களை அவமதித்து நடப்பதும், ''நான் ஒழுக்க முதலியவற்றால் உயர்ந்த வன்'' என்று மற்றவர்களை அவமதித்து நடப்பதும், ''நான் ஸர் வத்தையும்விட்டு விரக்தனாய் இருக்கின்றேன்''என்று மற்றவர்களை அவமதித்து நடப்பதும் ஆகிய இவை தாழ்ந்த வர்ணஸ்த்தர்களில் பரஸ்பரம் ஏற்படும் அபசாரங்களாகும். இவர்களும் தங்களுடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் பேற்றுக்குச் சாதனமில்லை யென்றும், கேவலம் பகவத்க்ருபையே பேற்றுக்குச் சாதனமென்றும் முடி வான உண்மையை யுணர்ந்து முற்கூறிய காரணங்களால் வரும் அஹங்காரத்திற்கு இடங்கொடாமல் தனது கிருபைக்கு விஷயமா கும்படி எம்பெருமான் அருள்புரிவானாக.

நிற்க; "ப்ராஹ்மண்யம் விலைச்செல்கிறது" என்னும் வாக்யந் தொடங்கி ஸ்லோகங்கட்கெழுதிய அர்த்தங்களையும்; அவற்றினடியாக உண்டான ஆக்ஷேபணைக் கெழுதிய சமாதானங்களையும், பக்ஷபாதமின்றி நோக்குகின்றவர்கட்கு இவை யதார்த்தமென்பது தெள்ளிதிற் புலனாகும். அடியேனுடைய சிற்றறிவிற் கெட்டியவரையில் எழுதிய இவ்விஷயத்திற் பிழையுளதேல் உலகம்பொறுக்க.

இராகவராமாநுஜ தாஸர்,
மதுரை.

ஸ்ரீ

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]
(269-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதுவரை ஸாமாந்யமான பாதிவ்ருத்யரூப ஏகதர்மத்தில் அத்யவஸாய பேதத்தால் பலத்தின் தாரதம்யம் காட்டப்பட்டது. ஏகதர்மாநுஷ்டானத்தில் அத்யவஸாய பேதத்தால் பலத்தின் தாரதம்யங்காட்டி அத்யவஸாயத்திற்குப பெருமையைத தெரிவிப்பதே கருத்தாயின், ஏகதர்மாநுஷ்டான பராளான புமான்கள் பலருமிருக்க அவர்களுடைய அநுஷ்டானத்தைக கொண்டு நிரூபியாமல் ஸ்திரீகளுடைய பாதிவ்ருத்ய அத்யவஸாயத்தைக் கொண்டு நிரூபித்ததற்குக்காரணம் யாதென்று கேள்வியுண்டாகலாம். அதற்குச் சமாதானம் இன்னதென்பதுரைக்கப் படுகிறது.

இங்கு, அத்யவஸாயத்திற்குப பெருமை குறிப்பிட்டது சரணாகதி நிஷ்டைக்கு அத்யவஸாயபூர்த்தி அவசியம் வேண்டுமென்பதைத் தெரிவித்தற்காகவே. அநந்யார்ஹ சேஷத்வஜ்ஞாந கார்யமாகச சரணாகதி நிஷ்டை வருகிறபடியால வயக்தி விசேஷத்தில் ஔபாதிகமான அநந்யார்ஹ சேஷத்வத்திற்கிசைந்த பதிவ்ருதை

கட்கு அத்யவஸாயபேதத்தால் பலாதிக்யங்காணில் ஸர்வசேஷி யான எம்பெருமான் விஷயத்தில் நிருபாதிகமாயுள்ள அநந்யார்ஹ சேஷத்வஜ்ஞாநபூர்த்தி யுடையார்க் குண்டான அத்யவஸாய பூர்த்தி நிரதிசயோத்கர்ஷாவஹமென்பது கிம்புநர்ந்யாயஸித்த மன்றோ! இதனைத் தெரிவித்தற்காகவே ஸ்திரீகளுடைய பாதிவ் ருத்ய அத்யவஸாயத்தைக்கொண்டு நிரூபிக்கலாயிற்று. இஃதல லாமலும் புருஷோத்தமனை எம்பெருமானை நோக்க ஸர்வமும் ஸ்திரீப்ராயமாகையால் ஸ்திரீகள் பர்த்தாவின் விஷயத்திலிருக்க வேண்டிய முறையே எம்பெருமான் விஷயத்தில் இவர்களுமிருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்தற்காக ஸ்திரீகளுடைய நிஷ்டை யைக்கொண்டு நிரூபிக்கலாயிற்றென் றுரைக்கினும் பொருந்தும்.

முன்பு, சாமான்ய தர்மநிஷ்டையில் ஊற்றத்தின் தாரதம்யத் தால் அத்யவஸாயத்தின்பெருமைவிளக்க லாயிற்று.இதனால்அநுஷ் டானத்திலும் அத்யவஸாயத்தின் பெருமை காட்டப்பட்டது இனி சரணாகதிநிஷ்டையில் அத்யவஸாய மிருக்கவேண்டிய முறையைப் பிராட்டியின் அநுஷ்டாநம் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும். பாதிவ்ருத்ய தர்மாநுஷ்டானத்தில் ஊற்றமுடையவர்களாக, முன் னர் குறிப்பிடப் பட்டவர்கள் திரௌபதிதன்னுடைய ரக்ஷணத்தில சக்தியில்லாமல் திகைத்தனள். தமயந்தி ஸ்வசக்தியைக்கொண்டு ரக்ஷித்துக்கொண்டாள். ஏகபத்தினியானவள் பிராமணன் சக்தி தன்னிடம் விலைச செல்லாமைக்குக் காரணம் தன்னுடைய சக்தி யென்று காட்டினாள். சாவித்திரியும் சக்தியை உபயோகிக்க கூடியமுறை நேரும்போது காட்டக்கூடியவளே. இவர்கள் தம சக்தியைக் கருவியாகக்கொண்டு தம்மைப பாதுகாத்துக்கொள்ளும் தன்மையுடையவர்களா யிருந்தனர். பிராட்டி மாத்திரம், மிகுந்த சக்தி தனக்கிருக்கச்செய்தேயும் அதை ஸ்வரக்ஷணத்திற் குபயோ கியாக்காமல் பராநுக்ரஹத்திறகே உபயோகியாக்கின ளென்பது தெளிவு. இதனைப் பின்னுரைக்குமாற்றால் நன்கறியலாம்.

"ந த்தஸ்ய ஸத்ருஸம்ஹவேத்" "நத்தஸ்ய ஸத்ருசம்பவேத்" என்று ஸ்வரக்ஷணத்தில் கைவாங்கியிருந்த பிராட்டி தானே திருவடி விஷயத்தில் அநுக்ரஹத்தாலே "ஸீதோபவ" என்று சொன்னுளிறே. ராவணன் செவிகைப்பச்சொல்லிய சொற்களையும், ஏகாக்ஷி முதலிய ராக்ஷஸப்பெண்கள் அதட்டியும் திட்டியுமுரைத்த உரைகளையும் சக்தியிருக்கவும் ஸஹித்துக்கொண்டு சக்திமானுடைய சகாயத்தையும் விரும்பாதே பெருமாள் சக்தியையே நோக்கிக்கொண்டிருந்தாள.

மேலும், இருக்கும் நாளில் * ஆத்யாத்மிகாதி துக்கங்களால் நலியப்பட்டிருந்தாளேயாகிலும், அவற்றை ஒழித்து நிரதிசயாநந்த பிராப்திக்குத் தானுக ஒரு யத்தனஞ்செய்வதை அறவே ஒழித்து, அவன் கைபார்த்திருப்பதே தக்கதென்று உறுதிகொண்டு, 'நம் தோஷங்கண்டு அவன் ஸ்வாதந்தர்யத்தால நம்மைக் கைவிடுவானே? அல்லது கருணைமேலிட்டு ரக்ஷிப்பானே?' என்ற கலக்கம் சிறிதுமில்லாதிருந்தனளாதலால் இவளிடத்தில் அத்யவஸாயத்தின் பூர்த்தியிருந்தமையறியலாம். சக்ரவர்த்தித்திருமகனுர், அவர் ரக்ஷணத்தில் உத்யோகத்தை விர்த்திபண்ணிவைக்கும் இளையபெருமாள் என்ற இவர்களின் திருவுள்ளக் கருத்தைப பிராட்டியார் உள்ளபடியறிந்தவளாகையாலே மழை பெய்வதில கங்காநதி கலங்காதிருப்பதுபோல இவள் சிறிதும் கலங்கினளில்லையென்று ரிஷி இவளது உறுதியினிலையைக் கொண்டாடிப் பேசினுர். கலக்கங்கட்குப் பல ஹேதுக்கள் நிகழ்ந்தனவேனும் அவனுடைய குணஜ்ஞாநத்தாலும் ஸ்வஸ்வரூபாநுஸந்தாநத்தாலுமகலக்கமற்றிருக்கையே உறுதியான எல்லையாகும். இத்தகைய உறுதிப்பாடு பிராட்டியாருக்கிருந்தமையை ரிஷி பலவிடங்களிலும் தெளிவாக அருளிச்செய்தனர். அதுவும் யாவர்க்கு மரிதாயிருந்ததேயாகிலும் அதைக் குறிப்பாக எடுத்துக்காட்டிய சுலோகத்தையும அதற்கு உலகாரியரான நம்

---

* ஆத்யாத்மிகாதி துக்கங்கள்—ஆத்யாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்விக மென்பன. இவற்றைத் தாபத்ரயம் என்று வழங்குவர். தன்னுல் வருவது பிறிதொன்றால் வருவது தெய்வத்தால் வருவது என்பன முறையே இவற்றின் பொருள்களாம்.

பிள்ளை ஈட்டில் ஸாதித்தருளிய வியாக்யான விசேஷத்தையும் இவ்விடத்தில் எடுத்துக்காட்டி அதில் வ்யவஹரிக்கவேண்டியவை களையும் நிரூபிக்கலாகும்.

தொடரும்.

ஸ்ரீ:

யமகிங்கர ஸம்வாதம்.

மயித்திரேயர் பராசரபகவானை நோக்கி ஏழு த்வீபங்களும், பாதாளங்களும் மேலேழுலகங்களும் அடங்கியிருக்கிற இந்தப் பிர்ம்மாண்டத்திற்குள்ளே ஸ்தூலங்களும் ஸூக்ஷ்மங்களும் ஸூக்ஷ்மத்திற் ஸூக்ஷ்மங்களும் ஸ்தூலங்களில் ஸ்தூலங்களுமான அநேக பிராணிகள் வாசஞ்செய்கின்றன. இந்தப் பிர்ம்மாண்டத்திற்குள் அங்குலத்தில் எட்டிலொருபங் கிடமானாலும் பிராணிகளில்லாத விடமேயில்லை. இந்த உயிர்களெல்லாம் கர்பவசத்தால் இங்கே பிறந்து ஆயுளின்முடிவில் யமவசப்பட்டு அவனாலே நியமிக்கப்பட்ட அந்தந்தத் துன்பங்களை அநுபவித்துமுடிந்தபிறகு தேவர் முதலிய சரீரங்களைக் கொள்கின்றன. இங்ஙனம் ஆத்மாக்கள் ஜனன மரணங்களில சுற்றிக்கொண்டே யிருக்கிறார்களென்று சாஸ்திரம் நிச்சயமாகக் கூறுகிறது. இப்படிச் சம்சாரத்திற் கட்டுண்டுழல்கிற ஆத்மாக்கள் எவ்வகையால் யமனுக்கு வசப்படாமல் தப்பமுடியும். அதனை யடியேனுக்கருளிச்செய்யவேண்டுமென்று பரார்த்தித்தார்.

மயித்திரேயரே! நீர் இப்பொழுது என்னிடத்திற்கேட்ட கேள்வியை முன்பு நகுலன் பீஷ்மரைக் கேட்டான். அதற்கு அவர் நகுலனை நோக்கிச் சொல்லலுற்றார்.— கலிங்க தேசத்திலிருந்து எனக்குச் சிநேகிதரான ஒரு பிராம்மணர் வந்திருந்தார். அவர் யோகதிருஷ்டியுடையவர்; பூர்வ ஜன்ம ஜ்ஞானங்களு மறிந்தவர்; அவரிடத்தில் நான் கேட்டதொன்றும் பொய்த்ததில்லை. நீ இப் பொழுது கேட்ட கேள்வியையே அவரை நான் கேட்டேன். அவர்

எனது கேள்வியைக்குறித்து யமகிங்கிர சம்வாதமொன்று சொன்னார். அது வருமாறு.—

ஒருகாலத்தில் பாசத்தைக் கையிற்கொண்டு பிராணிகளைக் கொண்டுவருவதற்குப் புறப்பட்ட தன் சேவகனை யமதருமன் அழைத்து * ரஹஸ்யமாகச் சொல்லத் தொடங்கினான்.—

---

* முற்காலத்தில் முத்கலன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் பெரும்பாவிகளில் தலைவன். ஒருநாள் கோதானம் செய்தான். அப்பொழுது 'கிருஷ்ணாய' என்று தானஞ் செய்தான். அவன் உயிர்விட்டபிறகு யமகிங்கரர் வந்து அவனைப் பற்றிக்கொண்டு யமன்பாற் செல்ல யமதருமன் எதிர் கொண்டு வந்து கௌரவித்தான். இதனைக்கண்ட முத்கலன், 'உம்முடைய தூதர்கள் என்னை இம்சைசெய்துகொண்டுவராநிற்க. நீர் என்னைக் கௌர விப்பதற்குக் காரணம் யாது?' என்று வினவினான். யமன் 'என் தூதர்கள் உன்னுடைய பெருமையை அறிந்திலர்; நீயுமறியாய் என்றனன். முத்கலன் என்பாலுள்ள நன்மை யாதென்று கேட்க, யமன் நீ ஒருசமயம் கிருஷ்ண நாமத்தைக் கூறினை; அந்த நாமத்தின் பெருமையை என்னென்பேன்; என்று சிறப்பித்துக் கூறினான். இங்ஙனம் இவ்விருவருக்கும் நிகழ்ந்த ஸம்வாதம் நரகாநுபவஞ்செய்கிறவர்களின் காதில் விழுந்தது. அதனால் அந்த நரகமானது துக்காநுபவஸ்தலமாயிருந்த தன்மை மாறி சுகாநுபவஸ்தலமாய் விட்டது. யாத்ருச்சிகமாக யமனுக்கும் முத்கலனுக்கும் நிகழ்ந்த ஸம்வாதத்தில் பகவந்நாமம் நரகாநுபவஞ் செய்கிறவர்களின் செவியிற்பட்டு நரகம் ஸ்வர்க்கத்தினியல்பை யடைந்ததை யமதருமன் நேரிற்கண்டவனாதலால் இப்பொழுதும் பகவந்நாமத்தைத் தமக்குப் பரமப்ராப்யமாகக்கொள்கின்ற பாகவதர்களின் வைபவம் நரகாநுபவம் செய்கிறவர்களின் செவியிற் படலாகாதென்ற கருத்தால் யமதருமன் தூதாகளை ஏகாந்தமாக அழைத்து அவர்களின் செவியில் மாத்திரம் கேட்கும்படி ரஹஸ்யமாகச் சொன்னான். இதனை,

"ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததியம: கில தஸ்யகர்ணமூலே,
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம்"

என்பதுங் காண்க.

இதன் பொருளாவது.— யமன், கையிற் பாசத்தையேந்தி நின்ற தன் கிங்கரனை நன்குநோக்கிப்பார்த்து அவன் காதடியில் ரஹஸ்யமாக மதுசூதனனாகிய எம்பெருமானை, சரணபுக்கவராகிய பெரியார்களைவிட்டுவிடு; நான் அவர்களொழிந்த ஏனையோர்கட்கே அதிகாரியாவேன். ஸ்ரீவைஷ்ணவர்கட்கு அதிகாரியாக மாட்டேன் என்பதாம்.

தூத! நீ பிராணிகளைக் கைக்கொண்டுவருகிறவிடம் பூலோக மாகவிருப்பதால் அங்கு எம்பெருமானுடைய திருநாமத்தை மறந்துவிட்டாலும், அந்யதெய்வங்களைத் தொழாதிருக்கின்ற ப்ர பந்நர்களாகிய பெரியார்களுமிருப்பார்கள். அவர்களிடத்தில் நீ அணுகலாகாது.

தூத— நான் பலவிடங்களிலும் சுற்றிக்கொண்டு வருவேனுதலால் அவர்கள்பால் அணுகாதிருக்க என்னால இயலாதன்றோ!

யம— அவர்கள்பால் நீ செல்வையானுல் உன்னுடைய கோரஸ்வ ரூபத்தைக் காட்டலாகாது. சாது வடிவினையுச் சென்று அவர்களைத் தண்டன் ஸமர்ப்பிப்பாய்.

தூத— பூலோகத்தில் உமமுடைய பெயரைக்கேட்டும் உம்முடைய கட்டளையின்படி நடக்கின்ற என்னுடைய பெயரைக் கேட்டும் நடுங்காதவர்களுண்டோ? இஃதல்லாமலும் அந்த உலகினர் யாயாதைபினின்று நீங்கவேண்டுமென்று உம்மு டைய பெயரையும் சித்ரகுப்தனுடைய பெயரையும் வைத்து தக்கொள்கின்றார்களே. உம்முடைய ஆக்ஞை செல்லாது விட்டுண்டோ? அப்படியிருக்க வைஷ்ணவர்களிடத்தில் அணுகலாகாதென்று உபதேசிக்கின்றீரே? இஃதென்ன ஆச்சரியமாகவிருக்கிறது.

யம— படனே! பூலோகமுழுமையும் என்னுடைய செங்கோன்மை நடைபெறுகிறதென்று கருதாதே.

தூத— அப்படியானுல் நீ வைஷ்ணவர்கட்கு அரசரானீரோ?

யம— நான் வைஷ்ணவர்கட்கு அரசனல்லேன். அவர்களொழிந்த ஏனையவர்கட்கே அரசனுவேன். எல்லாத் தெய்வங்களா

---

* "திறம்பேல்மின்கண்டீர்திருவடிதன்நாமம்
மறந்தும்புறந்தொழாமாந்தரை— இறைஞ்சியும்
சாதுவராயப்போதுமின்களென்றான்நமனுந்தன்
தூதுவரைக்கூவிச்செவிக்கு"

என்பதுங் காண்க.

ளும் ஆராதிக்கப்பட்ட ஸர்வேசுவரனாலே யான் யம னென்று பெயரிடப்பட்டு, சகல பிராணிகளுடைய பாப புண்ணியங்களை யாராய்ந்து நடக்கும்படி நியமிக்கப்பட்டேன்.

தூத— ஆனால் நீர் ஸ்வதந்திரர் அல்லீரோ?

யம— நான் ஹரிரூபியாகிய பகவானுக்கு வசப்பட்டிருக்கிறேனேயல்லது ஸ்வதந்திரனாயிருக்கிறேனில்லை. எனக்கிட்ட அதிகாரத்தினின்று வழுவினேனாகில் என்னையும் அந்த ஹரியானவர் தண்டிப்பார். கடகம் கிரீடம் குண்டலம் முதலான ஆபரணங்களிலேயும் காரணமானஸ்வர்ணமொன்றே வியாபித்திருப்பதுபோல தேவமனுஷ்ய பசு முதலான சகல காரியவர்க்கங்களிலும் ஸாக்ஷாத் ஹரி ஒருவனே வியாபித்திருக்கிறான். ஆதலால் அவனே ஸர்வேசுவரன். மற்றத் தேவர்களெல்லாம் அவனுடைய வியாப்தியைக்கொண்டு அவனது நியமனங்களைச் செலுத்திவருகிறார்கள். காற்றினால் கிளப்பப்பட்ட புழுதிகள் அந்தக் காற்றடங்கினபோது மறுபடியும் பூமியில் லயித்துப்போவதுபோல ஈசுவர ஸங்கல்பத்தினால் உண்டான குண வேறுபாட்டால் தோன்றிய தேவமனுஷ்யாதி வர்க்கங்களெல்லாம் அந்தக் குணவைஷம்யம் அடங்கினபோது அவ்வெம்பெருமானிடத்திலே அடங்குவார்கள். யாவராலும் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணனை எவன் அதுவே பிரயோஜனமாகச் சேவித்துக்கொண்டிருக்கிறானோ அத்தகைய பந்தமற்றவனைக்கண்டால் ஸமீபத்தில் நெருங்கி விடாமற் செல்வாய்.

தூத— ஸ்வாமி! அந்த நாராயண பராயணர்கள் இன்னாரென்று அடியேனறிந்துகொள்வதற்காக அவர்களுடைய லக்ஷணங்களை உபதேசிக்க வேண்டும்.

யம— எவன் தன்னுடைய வர்ணாச்சிரம தர்மங்களை ஈசுவரனுடைய ஆக்ஞாகைங்கர்யமென்று அதினின்று வழுவாது

நடப்பவனும், தன்னுடைய நண்பனிடத்திலும் சத்துருவிடத்திலும் சமபுத்தியுள்ளவனும், பிறர் பொருளை யபகரியாதவனும், ஒருயிரையுங் கொல்லாதவனு மிருப்பானே அவனே பரமாத்மாவின் பக்தனென்று தெரிந்துகொள். இத்தகைய பக்தனுடைய சித்தமானது ராகத்துவேஷாதிகளாகிய அழுக்கற்றதாயிருக்குமாதலால் பரமாத்மா அவனது இருதயத்தில சங்க சக்ராதி திவ்யாயுத சமேதனாய் முகமலர்ச்சியோடு எழுந்தருளியிருப்பான். இவனுடைய இருதயத்தில் ஹரிரூபியாகிய திவாகரன் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறுனதலால் அக்ஞானமாகிய இருள் ஒருபோதும் தலை காட்டமாட்டாது. இவன் எப்பொழுதும் இன்சொற்களையே பேசுவான். அஹங்காரமற்றவனயிருப்பான். நல்லொழுக்கத்திற் சிறிதும் வழுவாதிருப்பான்; பொருள்களை நெரிந்த சிலரோடாக மதிப்பான்; பகவத் கைங்கர்யததை ஈசுவரனிடத்திற் பிரார்த்திப்பானே யல்லது வேறென்றையும் பிரார்த்திக்க மாட்டான்; சிற்றின்ப விஷயத்தில பரமவிரக்தனயிருப்பான்; இந்தப் பக்தனுக்கு ஒப்புயர்வற்ற பரமாத்மாவே யெளியனய் வசபட்டிருபபானுகில் இவனுடைய மகிமையை யாராலுரைக்க முடியும்?

இனி, விஷ்ணுபக்தியில்லாத பாபிகளின் லக்ஷணத்தையுஞ் சொல்லுகிறேன் கேள். பிறர் பொருளை அபகரிக்கிறவனயும், பிற உயிர்களைக் கொல்கிறவனயும், கடினமான பேச்சுடையவனயும், தீவினையால் விளைந்த மதம் பொருந்திசித்தங்கலங்கினவனயும், பிறர் செல்வங்கண்டு பொறாமையுடையவனயும், ஸத்புருஷர்களைத் தூஷிக்கின்றவனயும், பகவதாராதன மற்றவனயும, பாகவத விஷயத்தில் திரவியத்தை விநியோகபடுத்தாமலிருப்பவனயும், தன் மித்திரனிடத்திலும், உறவினரிடத்திலும், மனைவியிடத்திலும், புத்திரன் தாய் தந்தையரிடத்திலும் வஞ்சனையுள்ளவனயும், பணமே பெரிதென மதித்துப் பேராசைகொண்டவனயும்,

கெட்ட சிந்தையும் கெட்ட ஒழுக்கமுமுடையவனுயும் இருப்பான். இந்தப் பாபியின் இருதயத்தில் பரமாத்மா வாசஞ்செய்ய மாட்டான். இந்தப் பாபிகளிடத்தில் என்னுடைய ஆஜ்ஞை நன்கு செலலும். இவர்களை நீ எப்படி சிக்ஷிக்கவேண்டுமென்று கருதினுலும் அப்படியே செய்வாய். முன்னுரைக்கப்பட்ட லக்ஷணங்களுடைய மஹாபுருஷனுடைய கடாக்ஷங்கடகு இலக்கானவிடங்களில் நீ செலலத்தக்கவனில்லை; நானும் கிட்டத்தக்கவனல்லேன்; செல்வோமாகில் எம்பெருமானுடைய சக்கரப்படையால் பதராக்கப்படுவோம்; அந்தப் பரமபக்தன் ஸ்ரீ வைகுண்டமாகிய திவ்யலோகத்திற்குச் செல்லத்தக்கவன். சூரியாதி லோகங்களைப்போலே நம்முடைய லோகம், அந்தப் பரம பாகவதன் பரமபதத்திற்கு எழுந்தருளும் வழியல்லாமையாலே அவன் கடாக்ஷத்திற்குரியதாகாது.

இதனைக்கேட்ட யமபடர் ஸ்ரீ வைஷ்ணவப் பிரபாவத்தை நன்கறிந்து எனக்கு ரஹஸ்யமாகச் சொன்னுன். பீஷ்மரே! உம்மிடத்திலுள்ள உள்ளன்பினுல் அதை நான் உமக்குப் போதித்தேன்; என்று அந்தக் களிங்க தேசத்துப் பிராம்மணர் எனக்குச் சொன்னுர். இதனை உனக்குச் சொன்னேன். இந்தச் சம்சாரமாகிய துன்பக்கடலிற் கிடந்துழல்கிற பிராணிகட்கு ஸ்ரீமந்நாராயணனைக்காட்டிலும் கடத்தேற முபாயம் வேறில்லை. எவன் ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்திருக்கிருனே அவன் விஷயத்தில் யமகிங்கராகிலும் காலதண்டமாகிலும் காலபாசமாகிலும் ஒன்றுஞ் செய்ய வல்லவையல்ல. இதுவரையில நான் உரைத்துவந்தவைகளை நீ நன்ருயறிந்துகொள்; என்று பீஷ்மர் நகுலனுக்கு எடுத்துரைத்தார்.

மயித்திரேயரே! நீர் கேட்ட கேள்விக்கு விடையாக இந்த யமகிங்கர சம்வாதத்தைச் சொன்னேன். அறிந்துகொள்வீராக.

நாகமணி செட்டியார்,
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(279-ம் பக்கத்தொடர்ச்சி.)

எ-ம். திருவாய்மொழி—பயிலும்.

௯-ம். பாட்டு—நாதனை.

(37) பிள்ளையாத்தான் என்று போரநல்லனாயிருப்பானொருவன், ஜீயர் ஸ்ரீபாதத்திலேவந்து 'எனக்கோருரு திருவாய்மொழி அருளிச்செய்யவேண்டும்' என்ன, 'உனக்கு விசதமாவது பிள்ளையோடே கேட்டாலாயிற்று, 'அங்கே கேள்' என்ன, 'அவரைத் தெண்டனிடவேண்டுமே' என்ன, 'அஃதொன்றுமன்றோ, வேணுமாகிற் செய்கிறாய்' என்றென்னை யழைத்து, இவனுக்குப் பாங்கான படி ஒருரு திருவாய்மொழி சொல்லும்' என்ன, இவ்வளவும் வரக் கேட்டவாறே யென்னை மிகவும் அநுவர்த்திக்கப்புக, நானொட்டா தொழிய, ஜீயர்பாடே சென்று 'இவ்வர்த்தத்தினுடைய சீர்மை யறியாமலே முன்னபடிச் சொன்னேன்; இனி நான் அநுவர்த்தித்ததுக்கிசையும்படி யருளிச்செய்யவேணும்' என்று ஜீயரையிட்டு நிர்ப்பந்தித் தநுவர்த்தித்தான்' என்றருளிச செய்வர்.

---

(37) "பாதம்பணியவல்லாரைப்பணியுமவர்கண்டீர்" என்ற விடத்தில் பாகவதசேஷத்வமுண்டாவது அருமையாகும் என்பதை விளக்கிக் காட்டுவதற்கு இவ்வரலாறுரைக்கப்பட்டுளது. போரநல்லான்—மிகவும நல்லவன். இங்கு ஜீயர் என்றது நஞ்சீயரை. ஸ்ரீபாதத்தில் வந்து என்றது அவர் திருவடிகளில் அணுகி நின்று தண்டன்சமர்ப்பித்து என்றவாறு. ஒருரு திருவாய்மொழி அருளிசசெய்யவேணும் என்றது ஒருமுறை திருவாய்மொழிக்கு வியாக்யானம் அருளிசசெய்யவேண்டும் என்றவாறு. உனக்கு விசதமாவது பிள்ளையோடே கேட்டாலாயிற்று என்றது நம்பிள்ளையிடத்திற் கேட்டால் உன்னறிவிக்குத் தெளிவாக விளங்குமென்றவாறு. நம்பிள்ளை கேட்பார் புத்திக்குத் தக்கவாறு எடுத்துரைக்கு மாற்றலுடையவராதலால் இங்ஙனம் அருளிச்செய்தார். அவரைத் தண்டனிடவேண்டுமே என்றது நம்பிள்ளையைத் தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டுமே என்றவாறு. அஃதாவது.—நம்பிள்ளையிடத்தில் திருவாய்மொழியின்பொருளைக் கேட்பதற்குச்சென்றால் அவரைப்

(38) வீரப்பிள்ளையும், பாலிகை வாளிப்பிள்ளையுமென்றிருவர் ஜீயர் ஸ்ரீபாதத்திற்கேகாந்தராய், தங்களிலே செறிந்து போந்தார்களாய் தேசாந்தரம் போனவிடத்தே வெறுப்புண்டாய்த் தங்களிலே வார்த்தை சொல்லாதேயிருக்க, இவர்களைப் பார்த்து,

---

பெரியாராக மதித்துத் தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டுமே; அது தமக்குச் சிறுமையாகத் தோற்றுவதாகப் பிள்ளையாத்தான் கருதினாரென்பதாம் அங்கே தோன்றுண்டோ என்றது அவரைத் தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டுமென்ற கஷ்டமுண்டோ என்றவாறு. வேணுமாகிற் செய்கிறாய் என்றது உனக்கு அவரைத் தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டுமென்ற விருப்பமிருக்குமாகில் செய்வாய் என்றவாறு. விருப்பமில்லையாகில் தண்டன்ஸமர்ப்பிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லையென்பது குறிப்பு. இவனுக்குப் பாங்கானபடி ஒருரு திருவாய்மொழி சொல்லும் என்றது இவன் உம்மைத் தண்டன் ஸமர்ப்பிக்கக் கூசுகின்றானாதலால் இவனை ஒரு ஆசனத்திலிருத்தி நீர் தண்டன் ஸமர்ப்பித்துத் திருவாய்மொழிப் பொருளை சொல்லும் என்றவாறு. இவ்வளவும் வரக்கேட்டவாறே என்றது "... பொன்னெடுஞ்சக்கரத்தெந்தைபிரான் றன்னைப், பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர், ஓதும்பிறப்பிடைதோறுமெம்மையாளுடையார்களே" என்ற இந்தப் பாசுரம் வரையிலுள்ள பொருளைக்கேட்டவாறே என்றவாறு. என்னையிட்டும் அநுவர்த்திக்கப்புக என்றது என் விஷயத்தில் மிகவும் அன்புகொண்டு வந்தனை வழிபாடுகளைச் செய்யப்புக என்றவாறு. நானொட்டாதொழிக என்றது நான் அதற்குச் சம்மதிசாதொழிய என்றவாறு. பிள்ளையாத்தானைத் தண்டன்ஸமர்ப்பித்துத் திருவாய்மொழிப்பொருளை சொல்லும்படி நஞ்சீயர் நியமித்தாராதலால் நம்பிள்ளை பிள்ளையாத்தான் செய்த வழிபாட்டிற்குடன்படா தொழிந்தார். ஜீயர்பாடே சென்று என்றது நஞ்சீயரிடத்திற்போய் என்றவாறு. இவ்வர்த்தத்தினுடைய சீர்மையறியாமையாலே என்றது அடியார்க்கடிமையாயிருக்கின்ற பெருமையறியாமையாலே என்றவாறு. முன்னப்படிச் சொன்னேன் என்றது முன்பு ததீயருக்கடிமையாயிருப்பது சிறுமையென்று கூறினேன் என்றவாறு. நான் அநுவர்த்திக்கத்தக்கிசையும்படி அருளிசெய்யவேணும் என்றது நான் அவரைத் தண்டன்ஸமர்ப்பித்துப் பணிவுடன் கேட்பதற்கிசையும்படி அருளிசெய்யவேண்டுமென்றவாறு.

(38) பாகவதசேஷத்வமுண்டாவது அருமையாமென்பதற்கு மற்றோர் விருத்தாந்தமும் இதனாலுரைக்கப்படுகிறது. ஜீயர்-நஞ்சீயர். ஸ்ரீபாதத்திற்கு

'பிள்ளைகாள்! அர்த்தகாமங்கள் த்யாஜ்யமல்லாமையோ பகவத் விஷயமராட்டுப் பிராட்டாயோ ஒரு ஸ்ரீவைஷ்ணவனும் ஒரு ஸ்ரீவைஷ்ணவனும் தங்களிலே வார்த்தை சொல்லாதே வெறுத்திருக்கிறது' என்ன இருவரும் எழுந்திருந்து தெண்டனிட்டுச் சங்கதராய்ப் போனார்கள்.

தொடரும். ப. அ.

ஏகாந்தராய் என்றது நஞ்சீயர் திருவடிகளில் அந்தரங்க கைங்கர்யஞ்செய்யுமவர்களாய் என்றவாறு. தங்களிலே செறிந்துபோந்தார்களாய் என்றது அந்த இரண்டு பேர்களும் மனமொற்றுமையுடையவர்களாய் அளவளாவியிருந்தார்கள் என்றவாறு. அர்த்தகாமங்கள் தியாஜ்யமல்லாமையோ என்றது பொருள் காமம் என்ற இரண்டும் விடத்தக்கதில்லையென்று கருதியோ என்றவாறு. பகவத் விஷயம் அராட்டுப்பிராட்டாயோ என்றது பகவத்விஷயம் அற்பமோ என்றவாறு. ஸ்ரீ வைஷ்ணவர்கள், விடத்தக்கதான அர்த்த காமங்கள் காரணமாகவுண்டாகின்ற வெறுப்பு முதலிய துர்க்குணங்களற்று மனமொற்றுமையுடையவர்களாயக் கூடியிருந்து பரமப்ரயோஜனமாகிய பகவத்குணங்களில் ஈடுபட்டுக் காலத்தைக்கழிப்பார்களன்றோ! அம்முறையை விட்டு நீங்கள் வெறுப்புற்றிருப்பது தகுதியோ என்பது ஜீயரருளிய கேள்வியின் தெளிவுப்பொருளாம். இக்கேள்வியைக்கேட்ட இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களும் முன்னிருந்த நிலைமையினின்றும் நீங்கிச் சிநேகிதமுடையவராய்ச் சென்றார்கள்.

ஸ்ரீ:

மதிப்புரை.

ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி—இது, உபயோகமாயுள்ள ஓர் நூல். சிறந்த பல பண்டிதர்களால் எழுதப்பெற்றுள்ள அகராதிகள் பலவுள்ளன. அவற்றுள் சில ஸம்ஸ்கிருதத்திலும், சில இங்லீஷிலும் பொருளெழுதப் பெற்றிருக்கின்றன. இவையனைத்தும் தமிழறிஞர்கட்குச் சிறிதும் உபயோகப்படுவதில்லை. இப்பொழுது திருமலராஜபுரம் ஜமீன்தார் ப்ரஹ்மஸ்ரீ நே. ஈ. வேங்கடேச சர்மா அவர்களால் இயற்றப்பெற்றது ஸம்ஸ்க்ருதம் வல்லுநருக்கும், ஏனையோர்கட்கும் உபகாரமாகவே விளங்குகின்றது. மக்கட்குத் தத்வ ஆராய்சசியே சாலச்சிறந்த தொன்றாதலால் அதற்கு உபயுக்தமாகவே இதில் வேதம் உபநிஷத் பகவத்கீதை பாஞ்சராத்ரம் பாஷ்யம் தர்க்கம் வ்யாகரணம் யோகசாஸ்திரம் ஜ்யோதிஷம் முதலியவற்றிலுள்ள பதங்கட்கே பெரும்பாலும் பொருளெழுதி ஆகரங்களும் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஸாஹித்யத்திலும் நிகண்டு முதலியவைகளிலும் பயின்றுள்ள அரியபல பதங்கட்கும் பொருளெழுதப் பெற்றுள்ளது. தமிழறிஞரிற் பெரும்பாலரும், ஏனையோரிற் சிலரும் நாகர லிபியைப் பயின்றிருக்க மாட்டார்களென்று கருதியே இந்நூலாசிரியர் பதங்களெல்லாம் கிரந்தலிபியில் வரைந்து தமிழிற் பொருளுரைத்திருக்கின்றனர். ஆதலால் ஸம்ஸ்க்ருதம் வல்லுநர்கட்கும் தமிழறிஞர்கட்கும் மாணாக்கர்கட்கும் இஃதோர் புது விருந்தாகவிருக்கும். ஆதலின் இதனை எல்லோரும் விரும்பிப்பெற்றுப் பயில்வார்களென்பதற் கையமில்லை. இவ்வகராதியின் முதற்பாகத்தில் உயிரெழுத்து முடிவாக எத்தனையோ பலவரிய பதங்கட்குப் பொருளெழுதப் பெற்றுள்ளது. ராயல் 188 பக்கங்கள்கொண்டது தபாற் செலவு உட்பட ரூ 2—0—0 வேண்டுவோர் கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

பத்திராதிபர், ஸ்ரீ. உ. வே. நே. ஈ. துரைசாமி ஐயங்காரவர்கள்
ப்ரம்ம ஸாயுஜ்ய லைப்ரெரி மானேஜர்,
நேமம் கிராமம், திருபஷி போஸ்ட்,
வயா பூந்தமலலி, செங்கற்பட்டு ஜில்லா.

(திருவரங்கம் பெரிய கோயில்) ஸம்ப்ரதாய தீபிகை.— இது, ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. ஸ்ரீராம சரித்திரம் விரிவாயிருப்பதுபோல ஸ்ரீராமபிரானால் கொண்டாடப்பெற்ற பெரிய பெருமாளின் வைபவமும், அவர் எழுந்தருளியிருக்கிற திருவரங்கத்தின் ப்ரபாவமும் மிகவும் விரிவாகவேயிருக்கும். இத்திவ்ய தேசமே ஏனைய தேசங்களிற்றலைசிறந்ததென்றும் இவ்வெம்பெருமானே ஆழ்வார் பதின்மர்களால் மங்களாசாஸனஞ்செய்யப்பெற்ற பெருமையுடையவரென்றும் வழங்குவர். இவையெல்லாமலும் நம்பூர்வாசார்யர்களுள் பெரும்பாலரும் தமக்கு பரமப்ராப்யஸ்தலமாக இத்திருவரங்கத்தையே பற்றியிருந்தனர். நம்பிராமாநுஜமுனிவருக்கும் இது முற்றூட்டாயிருந்தது. இத்துணை அருமைபெருமை வாய்ந்த இத்திவ்யதேசத்தில் தொன்றுதொட்டுவந்த வரன்முறை கலிஸாம்ராஜ்யத்தில மாறிவிடாதிருக்க இதனைப் புஸ்தக வடிவமாக்கிப பலருக்கும் உபகரிக்கவேண்டுமென்று கருதிய பத்திராதிபர் ஸாஹித்ய சிரோமணி ஸ்ரீ. உ. வே. பார்த்தசாரதி ஐயங்கார் ஸ்வாமியின் நோக்கம் போற்றத்தக்கதே. இவர் கோயில் ஸ்தானிகராயும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் வல்லுநராயுமிருப்பதால் கோயில் ஸம்ப்ரதாய நுட்பங்களைத் தவறுது எழுதுவதற்கு ஆற்றலுடையவரென்பதிற் சந்தேகமில்லை. இந்தப் பத்திரிகையில் 8-ம் பக்கம் 'கோயிலொழுகு' என்ற விஷயமும், 12 பக்கம் வரை கோயிலின் தற்கால நிகழ்ச்சிகளும், வேறு சில இன்றியமையாத விஷயங்களும் எழுதப்பெற்றுள்ளன. இவ்வாறே மாதந்தோறும் வெளிவரும். திருவரங்கத்தைப்பற்றிய முற்கால முறைகளையும் தற்கால இயல்புகளையும் அறிந்துகொள்ளுதற்கு இப்பத்திரிகை பெரிதும் துணையாயிருக்கும். ஆதலால பரமுகர்களும் ஏனையோர்களும் இப்பத்திரிகை என்றும் நிலையுறுமாறு உதவி புரிவாராக.

இதன் வருடச்சந்தா ரூ 1—4—0 வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:—

ஸ்தானீகம் பார்த்தசாரதி ஐயங்கார்,
ஸாஹித்ய சிரோமணி,
வடக்குச சித்திரை வீதி,
ஸ்ரீரங்கம்.